பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

27 04 2025 **SUNDAY** 7 15 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உற்பத்திக்கான இந்தியா திட்டம், உலக அளவில் முக்கியத்துவம் பெற்று வருவதாக மத்திய அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

2. புற்றுநோய் சிகிச்சையில் இந்தியா பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெபி. நட்டா தெரிவித்துள்ளார்.

3. கப்பலிலிருந்து எதிரியின் இலக்குகளை தாக்கும் ஏவுகணை சோதனையை இந்திய கடற்படை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது.

4. யுக்ரைனுக்கு எதிரான போரில் வடகொரிய படைகளும் ஈடுபட்டுள்ளதாக ரஷ்யா ஒப்புக் கொண்டுள்ளது.

5. முத்தரப்பு ஒருநாள் மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 9 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கையை வென்றது.

**>>>>><<<<<**

உற்பத்திக்கான இந்தியா திட்டம், உலக அளவில் முக்கியத்துவம் பெற்று வருவதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

ஐஃபோன் உதிரிப் பாக தொழிற்சாலைகள் அனைத்தும் அடுத்த ஆண்டிற்குள் இந்தியாவிற்கு மாற்றப்படும் என்று ஆப்பிள் நிறுவனம் தெரிவித்திருப்பது குறித்த செய்திகளை அவர் தமது சமூகவலைதளத்தில் பகிர்ந்துள்ளார்.

இது, உலகளாவிய உற்பத்தியில், இந்தியாவின் பங்கு அதிகரித்து வருவதை எடுத்துக் காட்டுவதாக உள்ளது என்றும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டுள்ளார்.

**>>>>><<<<<**

புற்றுநோய் சிகிச்சையில் இந்தியா பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெபி. நட்டா தெரிவித்துள்ளார்.

மஹாராஷ்ட்ராவில் உள்ள சத்ரபதி சாம்பாஜி நகர் அரசு புற்றுநோய் மருத்துவமனையில் அதிநவீன **True Beam** சாதனத்தின் சேவையை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

புற்றுநோய் பாதிப்பை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிவது மற்றும் சிகிச்சை மையங்களை அதிக அளவில் திறப்பது போன்ற நடவடிக்கைகளில் மத்திய அரசு தீவிர கவனம் செலுத்தி வருவதாக அவர் கூறினார்.

பாதிப்பு கண்டறியப்பட்டதிலிருந்து 30 நாட்களுக்குள் சிகிச்சை தொடங்கப்படுவதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

**True Beam** சாதனம் புற்றுநோய் பாதிப்பை துல்லியமாக கண்டறிய உதவிகரமாக இருக்கும் என்றும் திரு. ஜெபி. நட்டா தெரிவித்தார்.

**>>>>><<<<<**

தீவிரவாதத்திற்கு எதிராக நாட்டு மக்கள் அனைவரும் ஓரணியில் திரள வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி மன்கிபாத் உரையில் குறிப்பிட்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

பிரதமரின் உரை குறித்து தமது சமூகவலைதள பக்கத்தில் குறிப்பிட்டுள்ள அவர், பஹல்காம் தீவிரவாத தாக்குதல் சம்பவத்தில் நீதியை நிலைநாட்ட தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ளும் என்று பிரதமர் உறுதியளித்திருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

**>>>>><<<<<**

டிஜிட்டல் இந்தியா இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் விதமாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்திற்கு உட்பட்ட தேசிய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பக் கழகம் எட்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.

இத்துறையின் செயலாளர் திரு. எஸ். கிருஷ்ணன் முன்னிலையில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

அப்போது பேசிய அவர், கல்வி நிறுவனங்கள், தொழில்நிறுவனங்கள் மற்றும் அரசு அமைப்புகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு நாட்டின் டிஜிட்டல் கட்டமைப்பை வலுவானதாக்க உதவும் என்றார்.

அத்துடன், எதிர்காலத்திற்கு ஏற்ற தொழிலாளர்களை உருவாக்கவும் இந்த ஒப்பந்தங்கள் வகைசெய்யும் என்றும் திரு.கிருஷ்ணன் குறிப்பிட்டார்.

>>>>><<<<<

உத்ராகண்ட்டில் சார்தாம் மற்றும் ஹேம்குண்ட் சாகிப் புனித யாத்திரையில் பங்கேற்க பாகிஸ்தானைச் சேர்ந்த 77 பேரின் பதிவை உத்ராகண்ட் மாநில அரசு ரத்து செய்துள்ளது.

நைனிடாலில் இதனை தெரிவித்த அம்மாநில சுற்றுலா மற்றும் கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. சத்பால் மஹராஜ், இந்த யாத்திரையில் பங்கேற்கும் பக்தர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய மாநில அரசு உறுதிபூண்டுள்ளதாக கூறினார்.

சார்தாம் யாத்திரைக்கான அனைத்து ஏற்பாடுகளும் முடிவடைந்துள்ளதாக குறிப்பிட்ட அவர், 185 நாடுகளைச் சேர்ந்த 25 ஆயிரம் சர்வதேச யாத்ரிகர்கள் உட்பட 22 லட்சத்திற்கும் அதிகமானோர் இதில் பங்கேற்க பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த பயணத்திற்கான ஹெலிகாப்டர் டிக்கெட்டுகள் கள்ளச்சந்தையில் விற்பனை செய்யப்படுவதை தடுக்க, கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் திரு. சத்பால் மஹராஜ் கூறினார்.

>>>>><<<<<

கப்பலிலிருந்து எதிரியின் இலக்குகளை தாக்கும் ஏவுகணை சோதனையை இந்திய கடற்படை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது.

பல்வேறு இடங்களில் நிறுத்தப்பட்டுள்ள கடற்படை கப்பல்களிலிருந்து இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டதாக கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எத்தகைய சூழலிலும் நாட்டின் கடலோரப் பகுதிகளை பாதுகாக்க கடற்படை தயார்நிலையில் இருப்பதை இந்த சோதனை உறுதி செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

பாகிஸ்தானுடன் தொடர்புடைய ஆயுதக் கடத்தல் கும்பலைச் சேர்ந்த ஒருவர், பஞ்சாப் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உளவுத் தகவல்களின் அடிப்படையில், பஞ்சாப் காவல்துறையினர் மேற்கொண்ட சோதனையின் போது, அமிர்தசரஸை சேர்ந்த அபிஷேக்குமார் என்பவர் ஆயுதக்கடத்தலில் ஈடுபட்டது கண்டறியப்பட்டதை அடுத்து அவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 7 துப்பாக்கிகள், தோட்டாக்கள் உள்ளிட்ட ஆயுதங்கள் மற்றும் ஒன்றரை லட்சம் ரூபாய் ரொக்கப்பணம் கைப்பற்றப்பட்டிருப்பதாக பஞ்சாப் காவல்துறை டிஜிபி திரு. கவ்ரவ் யாதவ் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

இஸ்ரோ முன்னாள் தலைவர் கஸ்தூரிரங்கனின் உடல் முழு அரசு மரியாதையுடன் பெங்களூருவில் இன்று தகனம் செய்யப்பட்டது.

முன்னதாக, பெங்களூரு ராமன் ஆராய்ச்சி மைய வளாகத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு கர்நாடக ஆளுநர் திரு. தாவர்சந்த் கெலாட், முதலமைச்சர் திரு. சித்தராமையா, இஸ்ரோ தலைவர் திரு. நாராயணன் மற்றும் ஏராளமான விஞ்ஞானிகள் அஞ்சலி செலுத்தினர்.

பின்னர், **Hebbal** மயானத்திற்கு கஸ்தூரிரங்கனின் உடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, தகனம் செய்யப்பட்டது.

>>>>><<<<<

இந்திய கடற்படை கப்பலான **IOS Sagar** இரண்டாம் கட்ட கூட்டு கண்காணிப்புப் பணிக்காக மொரீசியஸ் நாட்டின் **Port Louis** துறைமுகத்தை சென்றடைந்துள்ளது.

கடந்த 5ஆம் தேதி கர்நாடகாவில் உள்ள **Karwar** துறைமுகத்திலிருந்து புறப்பட்ட இந்த கப்பலில், மொரீசியஸ் உட்பட இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் உள்ள 9 நாடுகளைச் சேர்ந்த 44 கடற்படை வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

நட்பு நாடுகளுடனான கடல்சார் ஒத்துழைப்பை மேம்படுத்துவது என்ற மத்திய அரசின் உறுதிப்பாட்டின் படி, இந்த கப்பல் மொரீசியஸ் சென்றுள்ளது.

**IOS Sagar** கப்பலில் சென்றுள்ள வீரர்களை மொரீசியஸ் பிரதமர் அலுவலக அதிகாரிகள் மற்றும் இந்திய தூதரக அதிகாரிகள் வரவேற்றனர்.

>>>>><<<<<

யுக்ரைனுக்கு எதிரான போரில் தங்களது படைகளுடன் இணைந்து, வடகொரிய படைகளும் தாக்குதல் நடத்தி வருவதாக ரஷ்யா ஒப்புக் கொண்டுள்ளது.

**Kursk** எல்லைப் பகுதியில் வடகொரிய படைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் ரஷ்ய ராணுவ தலைமை தளபதி ஜெனரல் **Valery Gerasimov** கூறியுள்ளார்.

ரஷ்ய வெளியுறவு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளரும் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

>>>>><<<<<

பங்களாதேஷில் பொதுத்தேர்தலை உரிய நேரத்தில் நடத்தாவிட்டால், பல்வேறு நெருக்கடிகளுக்கு ஆளாக நேரிடும் என்று அந்நாட்டைச் சேர்ந்த அரசுசாரா அமைப்புகள் தெரிவித்துள்ளன.

டாக்காவில் கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு பேசிய தொண்டு நிறுவனத்தின் நிர்வாகியான பேராசிரியர் **Mustafizur Rahman,** ஜனநாயக ரீதியிலான தேர்தல்கள் தாமதமானால் தொழில்துறை முதலீடுகள் சவால்களை சந்திக்க நேரிடும் என்று கூறினார்.

முதலீடுகளை ஈர்ப்பதற்கு அரசியல் நிலைத்தன்மை அவசியம் என்று குறிப்பிட்ட பேராசிரியர் திரு. **Rahman,** வியட்நாம் நாடு 360 பில்லியன் டாலர் அளவிற்கு அந்நிய முதலீடுகளை ஈர்த்துள்ள நிலையில், பங்களாதேஷில் 22 பில்லியன் டாலர் அளவிற்கே முதலீடுகள் வரப்பெற்றுள்ளதை சுட்டிக்காட்டினார்.

>>>>><<<<<

முத்தரப்பு ஒருநாள் மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 9 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கையை வென்றது.

கொழும்பில் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்ற இந்திய அணி முதலில் பந்துவீச தீர்மானித்தது.

மழை காரணமாக தாமதமாக தொடங்கிய இப்போட்டி, 39 ஓவராக குறைக்கப்பட்டதை அடுத்து, முதலில் பேட் செய்த இலங்கை அணி 38 புள்ளி ஒரு ஓவரில் 147 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

148 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்திய அணி 29 புள்ளி நான்கு ஓவரிலேயே ஒரு விக்கெட் இழப்புக்கு 149 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

**>>>>><<<<<**

சைப்ரஸ் இளையோர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Showrya Kiran Javvaji** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

**Nicosia-**வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர் 21-16, 21-19 என்ற செட்கணக்கில் சவுதி அரேபியாவின் **Aditya Kiran**-ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் **Ishita Negi** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**>>>>><<<<<**

ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்திய வீரர்கள் 14 பேர் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் பிரிவில் **Vanshika, Svi, Komal, Navya, Sunaina** உட்பட பத்து பேர் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் பிரிவில் **Sanskar Atram, Rudraksh Singh, Abijit, Lakshay** ஆகியோர் இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளனர்.

**>>>>><<<<<**

மான்செஸ்டரில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Krittwik Roy-Sayali Wani** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 11-8, 12-10, 7-11, 8-11, 11-5 என்ற செட்கணக்கில் லக்ஸம்பர்க்கின் **Sara -** சுவிட்சர்லாந்தின் **Rachel Moret** இணையை வென்றது.

**>>>>><<<<<**